## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – நிலுவையிலுள்ள பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்த்தல் தொடர்பாக அனைத்து மாவட்டங்களில் தோற்றுவிக்கப்பட்ட கண்காணிப்பு விசாரணை பிரிவுகளுக்கு உதவும் வகையில் புதிய மானுடவியலாளர்கள் நியமனம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சாமெ1) துறை**

**அரசாணை (ப) எண்:17**

**நாள் : 02.02.2022**
**பிலவ வருடம்,**
**தை மாதம் 20 -ஆம் நாள்,**
**திருவள்ளுவர் ஆண்டு 2053.**

படிக்கப்பட்டது.

1. அரசாணை (ப) எண்.230, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சா.மெ1)துறை,நாள் 07.09.2017.
2. அரசாணை (ப) எண்.263, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சா.மெ1)துறை, நாள் 26.10.2017.
3. அரசாணை (ப) எண்.87, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சா.மெ1)துறை, நாள் 13.05.2019.
4. பழங்குடியினர் நல இயக்குநரின் கடித ந.க. எண். ப.மே/ அ2/7397/2019, நாள் 04.10.2021 மற்றும் 10.01.2022.

---

**ஆணை :-**

மேலே ஒன்று, இரண்டு மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் நிலுவையிலுள்ள பழங்குடியினர் சாதிச்சான்று மெய்த்தன்மை சரிபார்த்தல் தொடர்பாக அனைத்து மாவட்டங்களில் தோற்றுவிக்கப்பட்ட கண்காணிப்பு விசாரணை பிரிவுகளுக்கு உதவும் வகையில் மானுடவியலர் நியமனம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில் மேலே ஒன்று, இரண்டு மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட

அரசாணைகளின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் பழங்குடியினர் சாதிச் சான்று மெய்த்தன்மை தொடர்பாக விசாரணை மேற்கொண்டுவரும் காவல்துணை கண்காணிப்பாளர்களின் விசாரணைக்கு உதவிடும் வகையில் மானுடவியலாளர்கள் நியமனம் செய்யப்பட்டது எனவும், இவ்வாறு நியமனம் செய்யப்பட்ட மானுடவியலாளர்கள் விசாரணை பிரிவு காவல்துணை கண்காணிப்பாளர்களுக்கு சரிவர விசாரணைக்கு ஒத்துழைக்காத காரணத்தால் அனேக கோப்புகள் நிலுவையில் இருப்பதாகவும், காவல் துணை கண்காணிப்பாளர்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், இது தொடர்பாக சாதிச்சான்று மெய்த்தன்மை தொடர்பான விசாரணைகளை விரைந்து முடித்திடவும், நிலுவையில் உள்ள இனங்களை குறைப்பதற்கு ஏதுவாகவும் புதிய மானுடவியலாளர்களை நியமனம் செய்யும் பொருட்டு தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, மானுடவியலாளர்களை தெரிவு செய்ய பழங்குடியினர் நல இயக்குநரின் செயல்முறைகளின்படி சுூர்நோக்கு குழு ஒன்று உருவாக்கப்பட்டது எனவும், அக்சுூர்நோக்கு குழுவால் 14 மானுடவியலாளர்கள் இறுதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளது எனவும், அப்பட்டியலில் இருந்து மானுடவியலாளர்களை நியமனம் செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பழங்குடியினர் சாதிச்சான்று மெய்த்தன்மை அறிதல் தொடர்பாக மாவட்டங்களில் தோற்றுவிக்கப்பட்ட கண்காணிப்பு விசாரணை பிரிவுகள் பழங்குடியினர்களின் விந்தையான / தனியியல்பான மானுடவியல் மற்றும் இனம் சார்ந்த பண்புகள், தெய்வம், சடங்குகள், பழக்க வழக்கங்கள், திருமணமுறை, ஈமச்சடங்குகள், இறந்தவர் உடலை தகனம் செய்யும் முறை போன்றவைகளை மானுடவியல் நிபுணர் உதவியுடன் கண்காணிப்பு விசாரணைப் பிரிவு அலுவலர் சேகரிக்க வேண்டியது அவசியமானதாகும். எனவே, பழங்குடியினர் நல இயக்குநர் மூலமாக பெறப்பட்ட புதிய மானுடவியலாளர்களின் பெயர் பட்டியலானது அரசால் நன்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்டு கண்காணிப்பு விசாரணைப் பிரிவு அலுவலர்களுக்கு உதவும் வகையில் கீழ்கண்டுள்ளவாறு மாவட்டங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

| வரிசை எண் | மாவட்டம் | மானுடவியலாளரின் பெயர் |
|---|---|---|
| 1 | சென்னை மண்டலம் | முனைவர் பு. இக்னேஸியஸ் பிரபாகர் |
| 2 | சேலம் மண்டலம் | பா. இராம்குமார் |
| 3 | திருச்சி மண்டலம் | க. பிரசாந்த் |
| 4 | மதுரை மண்டலம் | முனைவர் கி. பாரிமுருகன் |

| | | |
|---|---|---|
| 5 | தென்காசி<br>தூத்துக்குடி<br>திருநெல்வேலி<br>கன்னியாகுமரி | வ. அமுத வள்ளுவன் |
| 6 | விருதுநகர்<br>இராமநாதபுரம்<br>சிவகங்கை | முனைவர் சி. சந்திரகுமார் |
| 7 | திண்டுக்கல்<br>தேனி<br>மதுரை மாநகர் | முனைவர் இரா. சசி |
| 8 | நீலகிரி<br>கோயம்புத்தூர்<br>திருப்பூர் | முனைவர் ச. காளிதாஸ் |
| 9 | ஈரோடு<br>சேலம்<br>நாமக்கல் | தீ. ஹேம மாலினி |
| 10 | தருமபுரி<br>கிருஷ்ணகிரி<br>திருப்பத்தூர் | சு. அபிராமி |
| 11 | திருவண்ணாமலை<br>விழுப்புரம்<br>கள்ளக்குறிச்சி | வெ. ராமகிருஷ்ணன் |
| 12 | வேலூர்<br>இராணிப்பேட்டை | முனைவர் ச. தே. சேவியர் |
| 13 | சென்னை<br>காஞ்சிபுரம்<br>திருவள்ளூர் | ச. சத்திய பிரியா |
| 14 | தஞ்சாவூர்<br>திருவாரூர்<br>நாகப்பட்டினம் | க. அருண்குமார் |

4. மேலே குறிப்பிட்டுள்ள மானுடவியலாளர்கள், நிலவையிலுள்ள பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை அறிதல் குறித்து

மாவட்டங்களில் தோற்றுவிக்கப்பட்ட 42 கண்காணிப்பு விசாரணை பிரிவுகளுக்கு உதவும் வகையில் பணியாற்றுவார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசகன்,
அரசு முதன்மை செயலாளர்

**பெறுநர்**

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.
அரசு முதன்மை செயலாளர்,
வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.
அரசு முதன்மை செயலாளர் / ஆணையர்,
வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை – 5.
காவல்துறை இயக்குநர், மயிலாப்பூர், சென்னை-4.
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் சென்னை-5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5.
இயக்குநர், பழங்குடியினர் ஆய்வு மையம், உதகை-4.
கூடுதல் காவல்துறை இயக்குநர்,
சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு, மயிலாப்பூர், சென்னை-4.
பதிவாளர், சென்னை பல்கலைக் கழகம், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர்,
சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவுகள் / கண்காணிப்பு விசாரணைப் பிரிவுகள்

<u>நகல்</u>

அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
ஆதி(ம)பந (சாமெ.2 / சாமெ.3 / சா.மெ-4 / சா.மெ.5 / சா.மெ.6) துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.
இருப்புக்கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 2/2/2022

02/02